# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 11 திங்கட்கிழமை 28.10.2024 கதிர் 400









## பத்து மாதங்களின் பின்னர் மீண்டும் வந்தாள் யாழ்தேவி!

யாழ்ப்பாணம், அக். 28

மஹவ மற்றும் அனுராதபுரம் வரையான புகையிரதப் பாதை நவீனமயமாக்கல் பணிகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வடக்கு ரயில் மார்க்கத்தின் கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான புகையிரத சேவை இன்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டது.

இன்று காலை 5.45 மணிக்கு கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து 2➤



# இலங்கை மீது பயணத்தடை இல்லை!

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் தெரிவிப்பு

**கொழும்பு, அக்.28**

**இலங்கைக்கு பயணத்தடை விதிக்கப்பட்டதாக கூறுவது போலியான செய்தி என்றும், இலங்கைக்கு கடந்த காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றுலா ஆலோசனையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி ஜே சாங் தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,**

"பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து அமெரிக்க தூதரகம் ஏதேனும் தகவல் அறிந்தால், அந்தத் தகவலைப் பற்றி நாங்கள் எங்கள் ஊழியர்கள், அமெரிக்க பிரஜைகள் மற்றும் தொடர்புடைய அரசாங்கத்துக்குத் தெரிவிக்க வேணடும். அதில் இரட்டைக் கொள்கை பின்பற்றப்படவில்லை. இது உலகம் முழுவதும் நாம் பயன்படுத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறை. அறுகம்பே பகுதிக்கு அச்சுறுத்தல் இருப்பதை அறிந்த பின்னர், நாங்கள் இலங்கை அதிகாரிகளுக்கு தெரிவித்தோம். அவர்கள் விரைவாகப் பதிலளித்தனர்.

நாங்கள் அவர்களுடன் திறமையாக பணியாற்றி வருகிறோம். நாளாந்தம் அவர்களுடன் தொடர்பில் உள்ளோம். இலங்கையின் தலைமை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனான ஒத்துழைப்பை நாங்கள் பாராட்டுகிறோம். வெளிப்படைத்தன்மைக்கான அவர்களின் அர்ப்பணிப்பு விதிவிலக்கானது. நான் போலியான செய்திகள் வெளியாவதைப் பற்றியே பேச விரும்புகிறேன்.

இலங்கைக்கு பயணத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை. கடந்த வாரம், அமெரிக்கப் பிரஜைகளுக்கு மறு அறிவிப்பு வரும் வரை அறுகம்பேக்கு பகுதிக்கு பயணிக்க வேண்டாம் என எமது பாதுகாப்பு பிரிவு எச்சரிக்கை 2➤

## எல்பிட்டிய பிரதேச சபையின் புதிய தலைவராக நிஷாந்த?



கொழும்பு, அக். 28

எல்பிட்டிய பிரதேச சபையின் புதிய தலைவராக தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளர் நிஷாந்த பெரேரா நியமிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. 2➤



## வெடிபொருள்களுடன் இருவர் கைது!

பதவிய, அக்.28

வெடிபொருள்களுடன் பயணித்த சந்தேக நபர்கள் இரண்டு பேரைப் பதவிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம், நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை பதவிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலாம் மைல் கல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கார் ஒன்றை சோதனையிட்ட போது சட்ட விரோதமான முறையில், அனுமதிப்பத்திரம் இன்றிக் கொண்டுசெல்லப்பட்ட வெடிபொருள்களைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

துப்பாக்கி, ஜெலிக்னைட் குச்சிகள், டெட்டனேட்டர்கள் உட்பட கைப்பற்றப்பட்ட வெடிபொருள்களுடன், அவற்றைக் கொண்டு சென்ற காரும் பொலீசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் ஹிதோகம மற்றும் மாபலடிக்குளம் பகுதிகளைச் சேர்ந்த 28 மற்றும் 30 வயதுடையவர்கள் ஆவர். பதவிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஏப்ரல் 21 தாக்குதல் பற்றிய சனல்-4 காணொலி போலி என்கிறார் கம்மன்பில!



கொழும்பு, அக்.28

ஏப்ரல் 21 - ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட சனல்-4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட காணொளி ஒன்றில் அசாத் மௌலானா தாக்குதல் குறித்து வெளிப்படுத்திய தகவல்கள் அனைத்தும் போலியானவை என்று முன்னாள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஏற்கனவே, ஏ.என்.டி அல்விஸின் அறிக்கையில் வெளியிடப்படாத சில தகவல்களை அவர் வெளியிட்டிருந்த அவர், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாமின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களை இன்று வெளியிட்டார்.

ஏப்ரல் 21 - ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில், சனல்-4 தொலை காட்சி வெளியிட்டிருந்த 2➤

## ஷேக் ஹசீனாவைத் திருப்பி அனுப்ப கோரி இந்திய தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, அக். 28

இலங்கை- பங்களாதேஷ் நட்புறவு பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பில் அமைந்துள்ள இலங்கைக்கான இந்திய துதரக முன்றலில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ள ஷேக் ஹசீனாவையும், ஏனையவர்களையும் உடனடியாக பங்களாதேசுக்குத்திருப்பியனுப்ப வேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாகத்தெரியவருகிறது.

பங்களாதேஷில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்த நாட்டின் மாணவ இயக்கங்கள், எதிர்கட்சியினர், இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் 2➤

## அரச ஊழியருக்கான சம்பள உயர்வு அரசின் தீர்மானம் அல்ல - பிரதமர் ஹரிணி!



கொழும்பு, அக். 28

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிவிப்பு தேர்தலின் போது மக்களைத் தவறாக வழிநடத்துவதற்காக வெளியிடப்பட்டதேயன்றி, அரசாங்கத்தின் தீர்மானம் அல்ல என்று 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## ஏப்ரல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணொளி தொடர்பில் ஆராய்வதற்காகக் கடந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்த ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாமின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இன்று ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினார்.

ராஜபக்ஷவினரை அதிகாரத்திற்கு கொண்டு வரும் நோக்கில், அரச புலனாய்வு பிரிவினால் ஏப்ரல் 21 தாக்குதல் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கலாம் என சனல்-4 தொலைக்காட்சி ஆவணப்படுத்தியிருந்தது. அதனை முற்றாக நிராகரிப்பதாக அந்த ஆணைக்குழு தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

சனல்- 4 தொலைக்காட்சி ஏற்கனவே, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் செயற்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பான அறிக்கையிடலிலும் அந்த தொலைக்காட்சி செயற்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்திய தாக்குதல்தாரியான சஹ்ரான் ஹசிமுடன் மூன்று மணிநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்ததாக அசாத் மௌலானா சனல் 4 காணொளியில் தெரிவித்துள்ளார். அந்தக் கலந்துரையாடலில் தேசிய புலனாய்வு சேவையின் அப்போதைய பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேவும் பங்கேற்றிருந்ததாக அவர் கூறுகிறார்.

இந்த சந்திப்பு புத்தளம் - வனாத்தவில்லுவில் உள்ள சஹ்ரானுக்கு சொந்தமான தென்னந் தோட்டத்தில் அமைந்துள்ள வீடொன்றில் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்த வீட்டில் இருந்தே, 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 100 கிலோகிராமுக்கும் மேற்பட்ட வெடிப்பொருட்களை விசேட அதிரடிப்படையினர் மீட்டிருந்ததாக அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் 2 சந்தேகநபர்களும் அங்கு கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவரான ஹனீபா முனிஸ் என்பவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், குறித்த வீடு 2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதம் அளவிலேயே கட்டப்பட்டதாக வாக்குமூலம் வழங்கியிருந்ததாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறானால் அசாத் மௌலானா கூறியிருக்கும் காலப்பகுதியில், அங்கு வீடு ஒன்று இருந்திருக்கவில்லை.

எனவே, அவர் சனல்-4 காணொளியில் வெளிப்படுத்திய தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என உறுதியாவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், அசாத் மௌலானா கூறிய குறித்த காலப்பகுதியில் சுரேஷ் சாலே மலேசிய தூதரகத்தில் பணியாற்றியிருந்தார். எனவே, அவர் இலங்கையில் தங்கியிருக்கவில்லை. மலேசியா அறிந்திராமல் சுரேஷ் சாலே, இலங்கைக்கு வந்து புத்தளத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை.

அத்துடன், சஹ்ரான் ஹசிமின் தொலைத் தொடர்பு தரவுகளின் அடிப்படையில் அவர் உள்ளிட்ட குழுவினர் பெப்ரவரி மாதத்தின் இறுதி வரையில் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே செல்லவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில்தான் அசாத் மௌலானா வெளிப்படுத்திய தகவல்கள் போலியானவையாகக் காணப்படுகின்றன.

அசாத் மௌலானா சுவிட்ஸர்லாந்தில் அகதி அந்தஸ்த்தை பெறுவதற்காகவே, சனல்-4 தொலைக்காட்சியில் முன்னிலையாகி, நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் தகவல்களை வெளிப்படுத்தியிருந்தமை ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், சிரேஷ்ட பதவிகளை வகித்த ஓய்வு பெற்ற அரச அதிகாரி ஒருவரும் சனல்-4 காணொளியில் சில தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார். அவரது முகம் மறைக்கப்பட்டிருந்தமையினால், குறித்த நபரின் ஆள் அடையாளம் வெளிப்படவில்லை.

அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துடன் தொடர்புடையவர் என ஊகங்களின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள முடிகின்றது. இருப்பினும், உண்மையான தரவுகளின்றி அவரது பெயரை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவது சிறந்த விடயமாக அமையாது.

எவ்வாறாயினும், ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து உண்மையான தகவல்களை வெளிப்படுத்தும்வகையில் புதிய விசாரணைகளை தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்குமானால், சனல்-4 காணொளியில் வரும் இரண்டாவது நபரான அரச அதிகாரி தொடர்பிலும் தனியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, அறிக்கை கிடைக்கப்பெற்ற விதம் குறித்து தங்களிடம் ஏதேனும் வாக்குமூலம் பெறப்பட்டனவா என உதய கம்மன்பிலவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு பதிலளித்த அவர், தகவல்களை வெளியிட்ட தம்மீது எவ்வித விமர்சனங்களையும் வெளிப்படுத்தாமல், அரசாங்கம் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் மீது விமர்சனங்களை முன்வைப்பது பாரதூரமான விடயமாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (இ-05)

## ஷேக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திரண்டு கிளர்ச்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டு ஷேக் ஹசீனாவின் தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

அதன்போது கிளர்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசாங்கத்தினால் கொல்லப்பட்டனர். இதனால் உக்கிரமடைந்த கிளர்ச்சியினால், ஆட்சி கவிழக்கப்பட்டதோடு, முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான 45 பேர் இந்தியாவுக்கு தப்பி சென்றனர். முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக அந்நாட்டு உயர் நீதிமன்றத்தில் நிறைய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றின் அடிப்படையில் அவர்களைக் கைது செய்ய அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

தப்பிச்சென்ற அவர்களை இந்தியா அடைக்கலம் கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாகவும். ஷேக் ஹசீனா வையும், இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ளோரையும் உடனடியாக பங்களாதேசுக்கு திருப்பியனுப்ப வேண்டும் எனக் கோரியே இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர். இது விடயம் தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மகஜரொன்றையும் கையளித்தனர். (ஜ-05)

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்த போதிலும் அதற்கான நடைமுறை பின்பற்றப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாதுக்க பகுதியில் நேற்று இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில்,"தற்போது அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கத் தனது அரசாங்கம் தீர்மானம் எடுத்ததாக ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அமைச்சரவைக் கூட்டத்தின் அமைச்சரவைத் தீர்மானத்தைப் பார்க்கும் போது, திறைசேரியிடமோ அல்லது நிதியமைச்சின் அதிகாரிகளிடமோ அனுமதி பெறாமல் இந்த முடிவை எடுத்துள்ளார். முடிவு அறிவிக்கப்பட்டது, ஆனால் தீர்மானத்தை செயல்படுத்தும் பகுதியை செய்யாமல் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதனால் என்ன அர்த்தம்? தேர்தலின்போது மக்களை தவறாக வழிநடத்துவதற்காக அவர் வழங்கிய பொய்யான வாக்குறுதி இதுவாகும்" என்றார். (ஐ)

## எல்பிட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் கடந்த சனிக்கிழமை வட்டாரம் மற்றும் விகிதாசார முறையில் நடைபெற்றது. 30 ஆசனங்களைக் கொண்ட எல்பிட்டிய பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 15 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 3 ஆசனங்களையும் பொதுஜன ஐக்கிய பெரமுன மற்றும் சுயேட்சைக்குழு தலா 2 ஆசனங்களையும் பெற்றன.

பிரதேச சபையின் 15 ஆசனங்கள் தேசிய மக்கள் சக்திக்கும், எஞ்சிய 15 ஆசனங்கள் எதிர் தரப்பினருக்கும் செல்வதில் பிரச்சினை ஏற்படாது என தேர்தல் ஆணைக்குழுவின் முன் னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஐ-05)

## பத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புறப்பட்ட யாழ்தேவி புகையிரதம் மதியம் ஒரு மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. நாளை செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறையில் இருந்து காலை 10.30 மணிக்கு புறப்பட்டு 10.53 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்தை வந்தடைந்து 11 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும்.

இன்று முதல் தினமும் வடக்கு புகையிரதப் மார்க்கத்தில் புகையிரதங்கள் பயணிக்கும் என்றும், புகையிரதக் கடவைகளைப் பயன்படுத்தும் பொதுமக்கள் மிகவும் அவதானமாக செயல்படுமாறும் புகையிரதத் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுத்தது. ஆனால் இலங்கைக்கான பயண ஆலோசனையில் எந்த மாற்றமும் இல்லை. இது மாலைத்தீவு, இத்தாலி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு வழங்கப்படும் வழமையான பயண ஆலோசனைகளைப் போன்றதாகும்" என்றார்.

(ஐ)





# நாடாளுமன்றத் தேர்தல் 2024



# கட்சிகளின் பிளவினால் மக்கள் அதிருப்தி: மக்கள் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்!

## தமிழ் அரசின் முதன்மை வேட்பாளர் சிறீதரன்

கிளிநொச்சி, அக். 28

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உள்ளும் புறமுமாய் ஏற்பட்டுள்ள பிளவுகள், எமது மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்ப டுத்தியுள்ளது. அதனால் எமது மக்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்று இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின்யாழ்ப்பாணம்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். மேலும், ஈழத் தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியல் போரில், ஏகோபித்த தலை மைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசி யக் கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பயணிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்வேன் என்றும் உறுதியளித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கிளிநொச்சி -செல் வாநகர் வட்டாரத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாட் டாளர்களைச் சந்தித்துக் கலந்து ரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உள்ளும் புறமுமாய் ஏற்பட்டுள்ள பிளவுகள், எமது மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதனால் எமது மக்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாற வேண்டுமானால், தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்கும் கட்சிகளும், அதன் தலைமைகளும் ஓரணியில் இணைய வேண்டிய காலத் தேவை எழுந்துள்ளது.

உட்கட்சி முரண் நிலைகளைத் தாண்டி இது சாத்தியமா? என்ற கேள்வி இருந்தாலும், இனத் தின் இருப்புக்காக அதனைச் சாத்தியமாக்க வேண்டிய காலக் கடமை எமக்கு தரப்பட்டுள்ளதை உணர்ந்து, கொள்கை ரீதியான உடன்பாடுகளின் அடிப்படையில் முறைமைப்படுத்தப்பட்ட இணக்க நிலையை உருவாக்கவும், அதன்வழி ஈழத் தமிழர்களின் அரசியல் வெளியில் காத்திரமான தலைமைத்துவத்தை உருவாக்கவும் தொடர்ந்தும் உழைப்பேன். என்றார்.

(ஜ-09)



# ஆளுங்கட்சியோ, எதிர்க்கட்சியோ மக்கள் சேவையே எனது இலக்கு!

## முன்னாள் எம்.பி எம்.எஸ்.தௌபீக் தெரிவிப்பு




*திருகோணமலை, அக்.28*

*இந்த முறை தேர்தலில் வெற்றி பெற்று ஆளுந்தரப்பிலோ எதிர் தரப்பிலோ நாடாளுமன்ற உறுப்பினராகினால் மக்கள் குறைகளை தீர்த்து வைப்பேன் என்றும் மீண்டும் ஒரு முறை சந்தர்ப்பம் தாருங்கள் எனவும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நடாளுமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.*

*திருகோணமலை, கிண்ணியாவில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கடந்த 2020ம் ஆண்டில் அமோகமாக வெற்றி பெற்றேன். இம் முறை வீட்டுக்கு வீடு பிரச்சாரப் பணியில் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கட்சி ஆதரவாளர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறேன்.*

*மேலும், 24 வருட கால அரசியலில் சமூகத்துக்காக என்னை அர்ப்பணம் செய்து பல அபிவிருத்திகளைச் செய்து காட்டியுள்ளேன்.*

*இம்முறை திருகோணமலை மாவட்டம் இரு ஆசனங்களை வெற்றி கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது இதனால் ஆளுங்கட்சி அரசாங்க பிரதிநிதியாகவோ அல்லது எதிர் கட்சிபிரதிநிதியாகவோ எதுவாக இருந்தாலும் மக்கள் குறைகள் தீர்ப்பதற்கான எனது சேவை தொடரும் – என்றார்.*

*(ஐ-12)*

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# தமிழியல் நூலகம் திறப்பு



சிங்கப்பூர் எஸ்டேட்
கந்தையா கார்த்திகேசன்




ஈழத் தமிழர் வாழ்வியலின் மரபுவழிப் பண்புகள் பலவற்றையும் உள்வாங்கிய உணர்வோடு உயர்கல்விப் பணியாற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இலங்கைத் தமிழர்களின் உயர்கல்வி வரலாற்றின் உன்னதமானதொரு மைல்கல் 1974.10.06 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வளாகமாகும். இப் பொன்விழா ஆண்டில் தமிழியல் சார்ந்த ஆராய்ச்சிக்கு வலுவூட்டும் செயற்பாடுகளுள் ஒன்றாக 'தமிழியல் நூலகம்' 29.10.2024 அன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் காணப்படக் கூடிய தமிழியல் சார்ந்த தொகுப்புக்களைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும், தமிழியல் மாணவர்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி முதலான அறிவுசார் செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலமைந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்பது சிங்கப்பூரில் வாழ்ந்து மறைந்த நன்கொடைச் செம்மலான கந்தையா கார்த்திகேசனின் இறுதி விருப்பங்களுள் ஒன்றாக இருந்துள்ளது. இது தொடர்பில் கந்தையா கார்த்திகேசன் 1975ஆம் ஆண்டு தைமாதம் ஆறாம் திகதி உயில் ஒன்றை எழுதி வைத்திருந்தார்.

இதனடிப்படையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழியலும், இசையியலும் மேம்பாடு காண்பதற்கெனப் பெரும் தொகை அவரால் உவந்தளிக்கப்பட்டிருந்தது.

## ஆரம்பப் பணிகள்

ஆரம்பத்தில் தமிழ்த்துறைக்கென ஒரு நூலகத்தை ஆரம்பிப்பது பற்றி சிந்திக்கப்பட்ட போதும், பின்னர் நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் தனியானதொரு அமைவிடத்தில் 'தமிழியல் நூலகம்' என்னும் பெயருடன் ஒரு நூலகத்தை நிறுவுவதற்கான செயற்றிட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

2015ஆண்டில் இருந்து இம் முயற்சிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெடுத்த போதிலும், ஏறத்தாளப் பதினைந்து ஆண்டுகளின் பின்னர் 2021 ஆம் ஆண்டிலேயே தமிழியல் நூலகத்தை நிறுவும் முயற்சி சாத்தியமாகியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 09.06.2021 இல் நடைபெற்ற 454 வது பேரவைக் கூட்டத்தில் தமிழியல் நூலகத்தை நிறுவுவதற்கான அனுமதியும், தேவையான நிதி ஒதுக்கீடும் கிடைக்கப் பெற்றன. கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தினதும், துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசாவின் பெருமுயற்சி மற்றும் வழிகாட்டுதலிலும் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வேலையை முன்னெடுப்பதற்காக நூலகப் பணியாட் தொகுதியினரை உள்ளடக்கியதான செயற்றிட்டக் குழுவினர் நியமிக்கப்பட்டனர். நன்கொடையாளர் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசனின் இறுதி விருப்பங்களில் ஒன்றான தமிழியல் நூலகம் அமைக்கும் விருப்பம் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளின் பின்னர் இப்போது நிறைவேறுகின்றமை மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

## தமிழியல் நூலகத்தின் சிறப்பம்சங்கள்
## பொது மக்களுக்களையும் உள்ளீர்த்துச் சேவை வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் மாத்திரமல்லாமல், அதற்கும் அப்பாற்சென்று பொதுசனங்களையும் உள்ளீர்த்துச் சேவை வழங்கும் நோக்கோடு ஒரு விரிந்த சேவைத் தளத்தில் தமிழியல் நூலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், பாலபண்டித மாணவர்கள், தமிழ்ப் பண்டித மாணவர்கள், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், வெளிநிலை ஆராய்ச்சியாளர்கள் என்றவாறு விசாலமான வாசகர் குழுமம் தமிழியல் நூலகத்தின் பயனாளிகளாக வரவேற்கப்படுவர்.

## இலங்கைத் தமிழியல் வெளியீடுகளுக்கான சேகரிப்பு நிலையம்.

இந்நூலகம் இலங்கைவாழ் தமிழர்தம் வெளியீடுகளின் அனைத்து அம்சங்களையும் சேகரித்துப் பாதுகாத்துப் பாவனைக்கு வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றது. இலங்கைத் தமிழர் தம் மரபுரிமை சார்ந்த ஆக்கங்களைத் தேடித் தொகுப்பதில் தீவிர செயற்பாட்டுடன் தொடர்ந்து பணியாற்றத் திட்டமிட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கருவூலம்; என்றதொரு கருத்துருவாக்கத்தின் கீழ் இப் பிரதேசத்திற்கேயுரிய தனித்துவமான வெளியீடுகள் யாவற்றையும் வடித்தெடுத்துப் பாதுகாக்கும் சிறப்புச் செயற்பாடொன்றும் தமிழியல் நூலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந் நூலகத்தினுள்ளேயே ஒரு தனியான பகுதியில் இவ்வகை நூல்கள் சேகரிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திறப்புவிழாக் காணும் இந்நாளில் ஏறத்தாழ ஆயிரம் எண்ணிக்கையிலான அரியநூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் வரலாற்றினை இயம்பும் எண்ணிமத் தளம்.

தமிழ் வளர்த்த ஈழத்துச் சான்றோர்களின் உருவப் படங்கள் நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறுகளில் இருந்து தமிழியலைத் தமது வாழ்வியலாகக் கொண்டு எமது பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த ஈழத்துத் தமிழ்ச் சான்றோரை நினைவுகூர்ந்து, இளந்தலைமுறையினர்க்கு அச்சான்றோர்களை அறிமுகஞ்செய்து வைப்பது இச்செயற்பாட்டின் நோக்கமாக உள்ளது.

தமிழியல்கருவூலம்; என்ற எண்ணிமத்தளத்தினூடாக தமிழ்ச்சான்றோரின் வாழ்வியலையும், படைப்புக்களையும் சேகரித்துப் பாதுகாத்து இணையவழித் தகவற் பரவலாக்கம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பண்டிதர் வகுப்புக்கள்

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் பண்டிதர் கற்கை நெறிகளைப் பன்னெடுங்காலமாக நடாத்தி வந்தது. பின்னர் இச் சங்கம் நலிவுற்றதைத் தொடர்ந்து, ஈழத் தமிழர்தம் பாரம்பரியக் கல்விமுறையும் முடிவு நிலை நோக்கிச் செல்வதயாயிற்று. இந்நிலையில், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் எழுத்து நிலை ஒப்புதலோடு, பண்டிதர் கற்கையைத் தமிழியல் நூலகம் தனது செயற்பாடுகளுள் ஒன்றாக முன்னெடுத்து வருகின்றது. ஒவ்வொரு அணியிலும் ஐம்பது மாணவர்களுக்கு கந்தையா கார்த்திகேசன் நிதியத்தின் புலமைப் பரிசில் அடிப்படையில் இக்கற்கை நெறியைத் தொடர்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் கல்வியின் ஆழமான கற்றலுக்கு இது வழிவகுக்கும்.

## தமிழியல் ஆய்வுகளுக்கான வளநிலையம்

தமிழியல் என்பது தமிழ்மொழி, பண்பாடு, அறிவியல் முதலான அனைத்தையும் உள்ளீர்த்ததொரு செல்நெறி. இதற்கானதொரு ஒரு உசாத்துணை நிலையமாகத் தமிழியல் நூலகம் செயற்படும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆய்வுத் துணைக்கருவி நூல்களை உருவாக்கி வழங்குவதும் தமிழியல் நூலகத்தின் இன்னொரு செயற்பாடாகும். ஈழத்துத் தமிழ் மரபில் வெளியாகிய காலத்தால் முற்பட்ட 'வித்தகம்', 'ஞாயிறு', 'ஈழகேசரி' ,'சிந்தனை' போன்ற வெளியீடுகளை இனங்கண்டு அவற்றின் உள்ளடக்கத்தை வெளிக்கொணரும் வகையில் சொல்லடைவுகளைத் தயாரித்தல், மீள்பதிப்புச் செய்தல், தகவலைத் தெரிவு செய்து வாசகருக்கு வழங்குதல் முதலான ஆராய்ச்சியுதவிச் சேவைகளும் தமிழியல் நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சேவை வழங்குதல்.

ஆரோக்கியமான கற்றற் சூழல், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான இணைய வசதியுடனான கணினிக்கூடம், வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களிலும் தமிழியல் நூலகத்தைப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் என்றவாறு இந்நூலகம் அக்ரோபர் 29 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பிக்கிறது.

இந்நூலகம் ஒரு உசாத்துணை நூலகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலிலே தொடர்ந்து பணியாற்றுவதைத் திடசங்கற்பமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படுகின்றமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் புதியதொரு பரிமாணத்தைத் தோற்றிவிக்கின்றது.

" எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே! "


'எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
எங்கள் சின்னம்
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை
'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை
'வெற்றி' எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557



## நாடாளுமன்றத் தேர்தல் 2024



# ‘எல்பிட்டிய தேர்தல் முடிவில் பல படிப்பினைகள் நம்பிக்கையுடன் வாக்களித்தால் நாம் ஆட்சியமைப்போம்’

## - மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன்!



வவுனியா, அக். 28

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியால் தனித்து ஆட்சியமைக்க முடியாதென்ற செய்தியை, எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில், நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், “எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவுகள், பல படிப்பினைகளைச் சொல்கின்றன. அரசாங்கத்தின் எழுச்சி எதிர்பார்த்த அளவு அதிகாரிக்காது என்பது முதலாவது. சாத்தியமாகாதவற்றைக் கூறிவிட்டு, செய்ய முடியாமல் திணறுவதால் ஏற்பட்ட பின்னடைவு இரண்டாவது. பொதுத் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு தனித்து ஆட்சியமைக்க முடியாதது என்பது மூன்றாவது. இவை போன்ற பல விடயங்களை இத்தேர்தல் முடிவுகள் எதிர்வுகூறுகின்றன.

எனவே, அமையவுள்ள அரசாங்கம் கூட்டு அரசாங்கமாகவே அமையப் போகிறது. ஐக்கிய மக்கள் சக்திக்கு நம்பிக்கையுடன் வாக்களியுங்கள். சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரானவர்கள் என விமர்சிக்கப்பட்ட சம்பிக்க ரணவக்க எங்களுடன் இல்லை. சன்ன ஜயசுமனவும் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை.

எனவே, தமிழ், முஸ்லிம் மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்தால், அரசாங்கத்தை அமைக்கும் சந்தர்ப்பம் எமக்கே கிடைக்கும். வன்னியில் போட்டியிடும் சகோதரர் ரமணனுக்கு வாக்களித்தால், எமது கட்சி நான்கு அல்லது ஐந்து ஆசனங்களை வெல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும்” என்றார். (ஐ)

















யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. பீடபதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். வெள்ளிவிழா மலர் வெளியீடும், 25 வருடங்களுக்கு மேல் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.



# அனுர அறிவிப்பால் முன்னாள் ஜனாதிபதிகள் திகைப்பு!



கொழும்பு, அக். 28

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகள் சலுகைகள் நிச்சயமாக இரத்து செய்யப்படும் என ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தேகமவில் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், அனுர அறிவிப்பால் முன்னாள் ஜனாதிபதிகள் திகைப்பு! ; குழசஅநச ீசநளனைநவெள ளுவரநெென டீல யுரெசய ளு யுெைரஉெநஅநவெ

முன்னாள் ஜனாதிபதிகளை பராமரிப்பது கவனித்துக்கொள்வது மக்களின் வேலையில்லை என தெரிவித்துள்ள அவர் சுற்றுநிஷரூபங்கள், நாடாளுமன்ற சட்டங்கள் அரசமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு விசேட சலுகைகள் சிறப்புரிமைகள் வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அந்த சுற்றுநிஷரூபங்களில் சட்டங்களில் மாற்றங்களை கொண்டுவருவது குறித்து கவனம் செலுத்துகின்றோம் எனவும் ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க மேலும் கூறினார். (ஐ)









## மோட்டார் சைக்கிள் விபத்தில் தாய் பலி: குழந்தைகள் படுகாயம்

கொழும்பு, அக். 28

நிட்டம்புவவிலிருந்து ருவன்வெல்ல நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளொன்று விபத்திற்குள்ளானதில் இளம் தாயொருவர் உயிரிழந்துள்ளார். நிட்டம்புவவிலிருந்து ருவன்வெல்ல நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், வீதியின் வலதுபுறம் உள்ள பக்க வீதியில் திரும்ப முற்பட்ட போது மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று (27ஆம் திகதி) பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் சாரதியான (தாய்) மற்றும் சிறு குழந்தை மற்றும் சிறுமியொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது தாய் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த பெண் 37 வயதுடைய இந்துரானை பிரதேசத்தை சேர்ந்தவராவார். இவர் இந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த பிள்ளைகளின் தாய் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது படுகாயமடைந்த 10 வயது சிறுமி தற்போது கரவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், 4 வயது குழந்தை சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ருவன்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## மீண்டும் வீழ்ச்சியடையும் அமெரிக்க டொலரின் பெறுமதி

கொழும்பு, அக். 28

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடும்போது இன்றையதினம்(22.10. 2024) அமெரிக்க டொலரின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

இன்றைய நாணய மாற்று விகிதம்

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள இன்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 298.11 ஷரூபாவாகவும், கொள்வனவு விலை 289.06 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

பவுண்ட் மற்றும் யூரோவின் பெறுமதி

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 323.32 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 310.39 ஷரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் இன்றைய விற்பனை பெறுமதி 387.65 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 373.03 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

(ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.10.2024இல் வெளியிடப்பெற்றது.